முற்பகல் 11–30

4. கடல் நீரை நன்னீராக்கும் நிலையங்கள் அமைத்தல், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதிய குடிநீர், கழிவு நீர் மற்றும் கட்டமைப்புத் திட்டங்கள் அறிமுகம்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சீனக் கவிஞன் கவிதை பாடினான், 'தேவையுள்ள மழை இரவிலே பெய்யும்' என்று. எப்போது, என்ன தேவை என்பதை அறிந்து நமக்கு இயற்கை வரம் தருமானால், அது மகிழ்ச்சிமிக்கது என்ற வகையிலே வள்ளுவர்கூட 'பெய்யென பெய்யும் மழை இருக்கிறதே, அந்த மழைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு' என்றார். இப்பொழுது மழை பெய்தால் எப்படி இருக்கும் என்று கருதுகிறபோது பெய்கிற மழை இருக்கிறதே, அது தனிச் சிறப்புமிக்கது என்று சொன்னார். கோடை காலம் தொடங்கிவிட்டது. சென்னைப் பெருநகரம் இந்தியாவின் மிக முக்கிய மாபெரும் நகரங்களிலே முன்னணி நகரம்; வளர்ந்த நகரம். எப்படி வாய்க்குத் தண்ணீர் இல்லாமல் தவிக்குமோ என்று நினைக்கின்ற அந்த நினைப்பு வருவதற்கு முன்பாகவே அதற்கு விடியல் காணுகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சீனத்துக் கவிதையை மெய்ப்பிக்கும்வண்ணம், இப்போது இந்தத் தேவை தொடங்குவதற்கு முன்பாகவே அதற்காக திட்டமிட்டு, ஏற்கெனவே கடல் நீரைக் குடிநீராக்கும் அந்தத் திட்டத்தோடு இன்றைக்கு நெம்மேலியிலே, 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி, சென்னை மாநகரத்திலே இனி குடிநீர்ப் பிரச்சினையே இருக்காது என்கிற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) புதிய வீராணம் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் காட்டியவர் சாதனைச் செம்மல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு ஒரு நீண்ட தொலைநோக்கோடு திட்டமிட்டு கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை நெம்மேலியைத் தொடர்ந்து பட்டிபுலத்திலேயும் அமைக்கப்படும் என்று விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிற இந்தத் திட்டத்தை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.*

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 ஏப்ரல் 16

ஒரு தாய், அது சவலைப் பிள்ளையானாலும், அது எல்லா வகைகளிலும் ஆற்றல்மிக்க பிள்ளையாக இருந்தாலும், அதை ஒருசேரப் பார்க்கிற அந்த கண்ணோட்டத்தோடுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அது கிராமமானாலும், நகரமானாலும் ஒரு சேரப் பார்க்கிறார்கள். நேற்றைக்கு கிராமப்புறங்களுக்கு கட்டமைப்பு வசதி; இன்றைக்கு சென்னை மாநகரமும், சென்னை மாநகரத்தை உள்ளடக்கிய வளர்ந்து வருகிற நகர்ப்புற கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து சென்னை மாநகரத்திலே சாலை மேம்பாடு; குடிநீர் மேம்பாடு என்கிற இந்த புதிய பார்வையோடு இன்றைக்கு ரூ.1,000 கோடியை வாரி வழங்கியதோடு மட்டுமல்ல; 300 கோடி ரூபாய், 400 கோடி ரூபாய், 600 கோடி ரூபாய் எனக் கோடி, கோடியாக 5,000 கோடி ரூபாய்க்கு மேலே வாரி வழங்கியிருக்கின்ற வள்ளலின் வாரிசை வாயார வாழ்த்தி, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரம் வளர்ந்து வருகின்ற மாநகரம். விரிவாக்கப்பட்ட மாநகரமாகச் சென்னை மாறியிருக்கின்றபடியால், விரிவாக்கம் செய்யப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பகுதிகளுக்கெல்லாம் நல்ல சுத்தமான குடிநீர் கொடுக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கடல் நீரைக் குடிநீராக மாற்றுவதற்காக 1,000 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதேபோன்று 14 பகுதிகளுக்குக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 303 கோடியே 78 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்காக சுமார் 192 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். கழிவுநீரைச் சுத்தம் செய்கின்ற வகையிலே, அதற்காக 121 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். சென்னைப் பெருநகரில் நவீன மின் விளக்குகள் அமைப்பதற்கு 300 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் சாலை வசதிகளுக்காக இந்த நிதியாண்டில் 290 கோடி ரூபாயை

2013 ஏப்ரல் 16] [திரு. பி.வி. கதிரவன்]

ஒதுக்கியிருக்கிறார்கள். சென்னை மாநகரம் செழிப்பான, எழில்மிகு மாநகரமாக வர வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மக்களுக்கு நல்ல திட்டங்களை, தேவையான திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி வரவேற்றுப் பாராட்டுகிறது நன்றி.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய சிறு வயதில் பழைய மகாபலிபுரம் சாலையில் சென்று வந்திருக்கிறேன். அந்தச் சாலையின் ஓரமாக பெரிய பெரிய பைப்புகள் வைக்கப்பட்டு, அதற்குள்ளே ஆட்கள் எல்லாம் உள்ளே போய், வெளியே வந்து கொண்டிருப்பார்கள். இப்போது வெளிநாடு போன்று இருக்கிற அந்த பழைய மகாபலிபுரம் ரோட்டில்தான் அப்படிப்பட்ட நிலை இருந்தது. என்னவென்று கேட்டால், வீராணம் திட்டத்திற்காக அவை போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய சிறு வயதில் பொழுதுபோக்கிற்காக நான் அந்த ஊருக்குப் போவேன். அங்கே கேட்கும்போது, அவை வீராணத்திலிருந்து வருகிறது என்று சொல்வார்கள். எங்கே அந்த வீராணம் இருக்கின்றது என்று கேட்பேன். அந்த வீராணம் எங்கிருக்கிறது என்றே எனக்குத் தெரியாது. ஏனென்றால், எனக்குச் சிறு வயது. அது ஏதோ வெளிநாட்டில் இருக்கும் போலிருக்கிறது; அங்கிருந்து தண்ணீர் கொண்டுவரப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். கடந்த முறை மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அந்தத் திட்டத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்; எப்படியோ உடனடியாக அந்த வீராணம் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மக்களுக்குத் தண்ணீர் உடனே வந்துவிட்டது. எதைச் சொல்வார்களோ, அதைச் செய்வார்கள். நிறைய பேர், நாங்கள் 'சொல்வதைத்தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது எங்கே போனார்கள் என்றே

[திரு. ஆ. நாராயணன்] [2013 ஏப்ரல் 16

தெரியவில்லை. இப்போது இங்கே பார்த்தால்கூட யாரையுமே காணோம். அந்த அளவிற்கு வீராணம் திட்டத்தைச் சிறப்பாக அமல்படுத்தியிருக்கிறார்கள். இந்த வேளையில் இயற்கை நம்மை மிகவும் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தக் குடிநீர்ப் பிரச்சினையை எப்படித் தீர்க்க வேண்டும் என்று யோசித்து, கடல் நீரைக் குடிநீராக்குவதற்கு சுமார் 1,000 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி, தென் சென்னை, வட சென்னை என்று சென்னை மாநகர் முழுமைக்கும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள்.

அந்தக் காலத்திலே புரட்சித் தலைவர் அவர்கள், 'கடல் நீர் நடுவே பயணம் போனால், குடிநீர் தருபவர் யாரோ?' என்று பாடுவார்கள். கடலிலே போய் நாம் உப்புத் தண்ணீரைக் குடிக்க முடியுமா? அந்த உப்புத் தண்ணீரையே குடிக்கலாம் என்று சொல்லி, இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி, பல கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) 'குடிநீர் தருபவர் யாரோ?' என்று புரட்சித் தலைவர் அவர்கள் பாடியதற்கேற்ப, கடல் நீரைக் குடிநீராக்கி, கடலோரத்தில் வாழ்கின்ற மக்களுக்குக் குடிநீரை வழங்கியிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், எங்கள் தலைவரின் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழில்மிகு சென்னையுடன் இணைக்கப்பட்ட புதிய பகுதிகளுக்கு, 6.46 இலட்சம் மக்கள் பயனடையக்கூடிய வகையிலே, 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் நீரைக் குடிநீராக்கக்கூடிய இந்தத் திட்டத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கின்றோம். கிராம மக்களாக இருந்தாலும் சரி; நகர மக்களாக இருந்தாலும் சரி; மாநகர மக்களாக இருந்தாலும் சரி; அவர்களுக்காக தினந்தோறும் ஏதாவது ஒரு நல்ல திட்டத்தை அறிவித்துக் கொண்டே இருக்கின்றார்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்போது

2013 ஏப்ரல் 16] [திரு. அ. அஸ்லம் பாஷா]

வெளியிடப்பட்ட புதிய அறிவிப்புகளிலே என்னுடைய ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகராட்சி தொடர்பாக ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. ஆம்பூர் நகராட்சியிலே, மூன்றில் ஒரு பகுதி மக்கள் அதாவது, 40 ஆயிரம் மக்கள் வசிக்கக்கூடிய பெத்தலஹேம் என்று சொல்லக்கூடிய ஒரு பகுதி இருக்கிறது. ஒரு வருடம், இரண்டு வருடங்களாக இருக்கின்ற கோரிக்கை அல்ல அது; ஏறத்தாழ 40 ஆண்டுக் காலமாக இருந்துவரும் கோரிக்கை அது. அப்படிப்பட்ட அந்த 40 ஆண்டுக் காலக் கோரிக்கை, நம்முடைய பொற்கால ஆட்சியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்று மாலையிலிருந்தே அந்தப் பகுதியிலிருந்து எனக்குத் தொலைபேசிமூலம் அழைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. நான் இங்கே பெருமையோடு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'உலகத்திலே ஏழு அதிசயங்கள் இருக்கின்றன. இந்தப் பாலம் கட்டப்படுமேயானால், அது ஏழு அதிசயங்களைவிட முதன்மை அதிசயமாக, எட்டாவது மிகப் பெரிய அதிசயமாகத்தான் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், அந்தப் பகுதி ஒரு சமத்துவப் பகுதி. அந்தப் பகுதியில் இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள், இந்துக்கள் வசித்து வருவதோடு, 8 கோயில்கள், 4 மசூதிகள், 4 தேவாலயங்கள், அரசுத் துறையினுடைய அத்தனை அலுவலகங்களும் இருப்பதோடு, ஆம்பூர் நகருக்கே குடிநீர் தரக்கூடிய ஆனைமடுவு அங்கே இருக்கிறது. இப்படி அத்தனை பெருமைகளையும் கொண்டிருக்கக்கூடிய அந்தப் பகுதிக்கு, ஒரு பாதை கிடையாது. அந்த இரயில்வே பாலத்திலே கானாறு வழியாகத்தான் போகவேண்டும். மழைக் காலங்களில் தண்ணீர் வந்துவிட்டால், இரண்டு நாட்களுக்கு அந்தப் பகுதிக்குப் போகவே முடியாது; தண்டவாளத்தைத் தாண்டித்தான் போக முடியும். இதுவரையில் அந்தப் பகுதியில் நிகழ்ந்த விபத்துகளிலே 200-க்கும் மேற்பட்டவர்கள் சிக்கி அங்கேயே மரணமடைந்திருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையை யாராலும் நிறைவேற்ற முடியாது; பாலம் கட்டும் திட்டத்தை யாராலும் கொண்டுவர முடியாது என்று சொன்னார்கள். ஆனால், நான் நம்பிக்கையோடு சொன்னேன். முதன்முதலாக நான் இந்தச் சட்டமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அதுகுறித்து கோரிக்கை மனுவைக் கொடுத்தேன். கொடுத்த 15 நாட்களிலேயே

[திரு. அ. அஸ்லம் பாஷா] [2013 ஏப்ரல் 16

(மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்ற செய்தி வந்தவுடனேயே, நிச்சயமாக அங்கே அந்தப் பாலம் கட்டப்படும் என்று எங்களுக்கெல்லாம் நம்பிக்கை பிறந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாலத்தை மிக விரைவிலே கட்டிக் கொடுத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொற்கரங்களாலேயே திறந்து வைக்கப்பட வேண்டும் என்பதுதான் அந்தப் பகுதி மக்களின் ஆவலாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வெகு விரைவிலே அந்தப் பாலத்தைக் கட்டி முடித்து, எங்கள் ஆம்பூர் நகருக்கே வருகை தந்து, பாலத்தைத் திறந்து வைக்க வேண்டுமென்று என் தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதி மக்களின் சார்பாகவும், அந்தப் பகுதி மக்களின் சார்பாகவும், மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எனது கோரிக்கையைக் கொண்டு சென்று, ஒப்புதல் பெற்ற மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டத்தின் மண்ணின் மைந்தராக இருக்கக்கூடிய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தேசத்தினுடைய வளர்ச்சி, அந்த நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களுடைய எண்ணங்களால்தான் நிறைவேற்றப்படுகின்றது. அந்தவகையில், இந்திய நாட்டை, அதுவும் குறிப்பாக நாமெல்லாம் வாழ்கின்ற தமிழகத்தை இன்றைக்கு எல்லா துறைகளிலும் முன்னேற்றுகின்ற வகையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்திய மாநிலங்களில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றும் திட்டமாக, சென்னை

2013 ஏப்ரல் 16] [திரு. வெ. பொன்னுப்பாண்டி]

நகரத்தை எழில்மிகு சென்னையாக மாற்றுகின்ற நோக்கோடு, பேரவை விதி 110-ன்கீழ், இன்றைக்கு பல்வேறு திட்டங்களை இங்கே அறிவித்திருக்கின்றார்கள்.

அதிலும் குறிப்பாக, இன்றைக்கு நம்முடைய மக்கள் குடிநீருக்காக எங்கும் செல்லக்கூடாது; அவர்கள் இருக்கின்ற பகுதியிலேயே, அதற்கான தேவையை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்கின்ற திட்டத்தோடு, ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற புதிய வீராணம் திட்டம், மீஞ்சூர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம் இப்போது சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில், நம்முடைய சென்னையுடன் புதிதாக இணைக்கப்பட்ட பல்வேறு பகுதிகளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில், இன்றைக்கு அதற்கான திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கின்றார்கள். அதுவும், வருகின்ற 4 ஆண்டுகளுக்குள் சென்னை மாநகர மக்கள் குடிநீர்த் தேவைக்காக எங்கும் செல்லாத ஒரு நிலையை உருவாக்குகின்ற திட்டங்களை இன்றைக்கு அறிவித்திருக்கின்றார்கள். அதேபோல, உண்மையிலேயே சென்னையினுடைய தோற்றத்தை மாற்றிக் காட்டுகின்ற வகையில், 1 இலட்சத்து 20 ஆயிரம் மின் விளக்குகள் அமைக்கின்ற பணிக்காக ரூ.300 கோடி ஒதுக்கி, இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்படவிருக்கின்ற அந்தத் திட்டம்; அதேபோல, சென்னையை எழில்மிகு சென்னையாக உருவாக்குகின்ற வகையில், இங்கு இருக்கின்ற பல்வேறு நெருக்கடிகளைப் போக்குகின்ற வகையில், சுகாதாரத்தை முன்னேற்றுகின்ற வகையில், வடிகால்களைச் சீரமைத்து, அதற்கான திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்ற வகையில், அதற்கான சிறப்பு நிதி ஒதுக்கீடு, இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றி, சென்னை மாநகரம் எப்படி இருக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகின்றார்களோ அதற்கான தோற்றத்தோடு இன்றைக்கு சென்னை மாநகருக்கு சிறப்பான நிதி ஒதுக்கீடுகள் செய்து, தமிழகத்தை முன்னேற்றுகின்ற பணியைச் செய்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொண்டு, உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 ஏப்ரல் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நேற்று ஊரக வளர்ச்சித் துறை, இன்று நகராட்சி நிருவாகம் என இந்த இரண்டு துறைகளுக்கு மட்டுமல்ல; பேரவை விதி 110—ன்கீழ் பல துறைகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முற்பகல் 11—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குச் சிந்தனை உடைய தலைவர். “விஷன் 2023” என்று அறிவித்துவிட்ட பின்பு, அதனுடைய தொடர் நடவடிக்கையாக, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற முகத்தான், மக்களுடைய அடிப்படை வசதிகளை முதலில் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனையோடு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று சென்னை நகரை எழிலார்ந்த சென்னை நகரமாக மாற்றுவதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்கின்ற மக்களுக்கு அடிப்படைத் தேவையான குடிதண்ணீரை நிறைவாக வழங்க வேண்டுமென்று தூய சிந்தனையோடு இயற்கை பொய்த்தாலும்கூட, எந்தக் காலத்திலும் மக்கள் குடிதண்ணீருக்காக அலையக் கூடாது என்பதற்காக கடல் நீரைக் குடிநீராக மேம்படுத்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரண்டாவது முறை ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோதே, மீஞ்சூரில் ஒரு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தார்கள். அதைத் தொடர்ந்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 22—2—2013 அன்று நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தில் தங்களுடைய பொற்கரங்களால் 100 கோடி லிட்டர் தண்ணீரை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2013 ஏப்ரல் 16] [திரு. கே.பி. முனுசாமி]

அதைத் தொடர்ந்து, பாருங்கள் பல்வேறு முதலமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் வருவார்கள். ஒரு நிகழ்ச்சி என்று வந்து விட்டால் அந்த நிகழ்ச்சியைப் பார்ப்பார்கள். அந்த நிகழ்ச்சிக்கு என்ன தேவை என்று பார்த்துவிட்டுச் சென்று விடுவார்கள். நாங்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம். அருகில் 10.5 ஏக்கர் நிலம் காலியாக இருக்கிறது. நாங்கள் அந்த நிலத்தை வேறு திட்டத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறோம், ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த நிலத்தைப் பார்த்துவிட்டு வந்த உடனேயே உரிய அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி, ஏன் நீங்கள் அந்த நிலத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது? கூடுதலாக அங்கு ஒரு 150 M.L.D. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை கொண்டு வர வேண்டும், நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லி இன்று விதி 110—ன்கீழ் அறிவித்தும் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல பட்டிபுலத்திலே 400 M.L.D. இரண்டுவிதமாக, அதாவது, இரண்டு அமைப்பாக 200 M.L.D., 200 M.L.D. என இரண்டு விதமாகக் கொண்டு வர இருக்கிறார்கள்.

நான் சட்டமன்றத்தில் என்னுடைய மானியக் கோரிக்கையில் ஒரு கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகராட்சியினுடைய வரலாற்றில், வளர்ச்சி மேம்பாட்டில் பல்வேறு தலைவர்கள் இந்த நகரை அழகுபடுத்தி இருந்தாலும்கூட, கிட்டத்தட்ட 300 ஆண்டுகளுக்கு மேலான வரலாறு கொண்ட இந்தத் தலைநகரத்திற்கு, அடிப்படை வசதிகளை முழுமையாக நிறைவேற்றிய ஓரே ஒரு தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது வரலாற்றுச் சான்றாகும். இன்று கிட்டத்தட்ட 100 கோடி லிட்டர் தண்ணீரை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஈர நெஞ்சினிலேயிருந்து வெளிப்படுத்தி, அவருடைய கரங்களால் இன்று ஒரு கோடி மக்களுக்கு வழங்குகிறார்கள். அவர்களுக்காக தமிழகம் முழுவதுமல்ல, உலகம் முழுவதும் வந்து இங்கே பணியாற்றிச் செல்கின்ற மக்களின் சார்பாக நான் மனமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

[திரு. கே.பி. முனுசாமி] [2013 ஏப்ரல் 16

அதுமட்டுமல்லாமல், இந்த மாநகரம் 176 சதுர கிலோ மீட்டரை உள்ளடக்கியதாக இருந்ததை 426 சதுர கிலோ மீட்டராக விரிவுப்படுத்திய காரணத்தினால், புதிதாக இணைக்கப்பட்ட அந்தப் பகுதிகள் ஏற்கெனவே இருக்கின்ற மாநகரம் என்னென்ன வசதி வாய்ப்புகள் உடையதாக இருக்கின்றதோ, அதேபோல மற்ற பகுதிகளும் இருக்க வேண்டுமென்பதற்காக, இப்போது விதி 110–ன்கீழ் புதிதாக சேர்க்கப்பட்ட 14 பகுதிகளுக்கு 303 கோடியே 78 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய இல்லங்களுக்கே குடிதண்ணீர் செல்லக்கூடிய திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை நகருடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளான சூரப்பட்டு, கதிர்வேடு, நொளம்பூர் மற்றும் முகலிவாக்கம் ஆகிய 4 பகுதிகளில் கழிவு நீரகற்றும் கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூ.121 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், நகராட்சிகளாக, பேரூராட்சிகளாக, ஊராட்சிகளாக இருந்த பல பகுதிகள் மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. மாநகராட்சியில் இருக்கின்ற மின் விளக்கை பார்ப்பீர்கள் என்று சொன்னால், சாலையினுடைய வசதி, அகலத்தினைப் பொறுத்து 7 மீட்டர் உயரம், 8½ மீட்டர் உயரம், 9 மீட்டர் உயரம் கொண்ட மின் விளக்குகள் அமைக்கப்படும். அதைப்போலவே கிட்டத்தட்ட 42 ஊராட்சி அமைப்புகளிலும் மாநகராட்சிக்கு இணையாக 1,10,000 மின் விளக்குகள் அமைப்பதற்காக 300 கோடி ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் துறை அதிர்ஷ்டம் செய்த துறை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையில் விதி 110–ன்கீழ் அறிவித்த அறிக்கைகள் அத்தனையையும் எங்கள் துறைக்கே அறிவித்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய மனமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி, அமருகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *'இன்று' என்பது நேற்றைக்கு நாளை, நாளைக்கு நேற்று. ஒவ்வொருவர் வாழ்விலும் ஆயிரம் நேற்றுகள்.* Thousands of Yesterdays *தோன்றுகின்றன. இலட்சக்கணக்கான நாளைகள்* Lakhs of Tomorrows *வருவதற்கு, எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவார். ஆனால், இன்று—* Today *என்பது போனால் வராது. இன்று என்பது மட்டுமல்ல, இந்த நிமிடம்கூட போனால் வராது. ஆனால், வாழ்வின் ஒவ்வொரு இன்றையும், ஒவ்வொரு நொடியையும் மிகவும் பயனுள்ளதாக ஆக்கி, தமிழர்கள் வளமுடன் வாழ, நாளைய சந்ததி ஏற்றம் பெற, முனைப்பான திட்டங்களை, முன்னேற்றத் திட்டங்களை, ஏற்றம் பெற வைக்கும் திட்டங்களை, நாள்தோறும், மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து வருகிறார்கள். வாழ்க்கையின் முழு அர்த்தமே ஒவ்வொரு மனிதனும் தனக்குள் இருக்கும் ஆற்றல்களை முழுவதுமாக வெளிப்படுத்தி, பிறருக்கும் பயன்படுகிறமாதிரி செயல்படுவதே என்றும் அதுவே ஒருவரின் உன்னத வெற்றியாகும் என சர்ச்சில் குறிப்பிட்டுள்ளார்.*

காவேரி நதிநீர் உரிமை உள்ளிட்ட தமிழக உரிமைகளை மீட்டு, நிலைநாட்டிய போராளி, உழைக்கும் மக்களின் உயிர்த் துடிப்பாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழர்கள் நல்வாழ்விற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய வளத்திற்காக ஒவ்வொரு இன்றைய பொழுதையும், ஒவ்வொரு இந்த நொடியையும், செலவழித்துப் பயனுள்ளதாக ஆக்குகிறார் என்பதைக் கூறுவதில் நான் பெருமைகொள்கிறேன். நகரங்களை நோக்கி மக்கள் நகருவதைத் தவிர்க்க மக்களே நீங்கள் நகராதீர்கள், மக்களைத் தேடி வரும் அரசாங்கம் இது. நீங்கள் இருக்கும் பகுதியிலேயே, நகரங்களுக்கு ஈடான அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறேன் என விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் நூறு சதவிகிதம் செய்து தர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். குடிநீருக்காக மட்டும் 1,303 கோடி ரூபாய். மாண்புமிகு அம்மாவின் அரசு நூற்றுக்கு நூறு மட்டும் வாங்குகிற அரசு அல்ல. நூற்றுக்கு 1,303–ம் அதற்கு மேலும் வாங்குகிற அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எழில்மிகு சென்னையாக மாற்ற சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்களுடைய நன்றியோடு, என்னுடைய நன்றியையும் இணைத்துத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)